# புனித அந்தோனியார் கல்லூரி
## ஊர்காவற்றுறை

29.07.2015

புதன்கிழமை, காலை 09.00 மணி

பிரதம விருந்தினர்
உயர்திரு. இராசா இரவீந்திரன்
(கௌரவ செயலாளர், கல்வி பண்பாட்டலுவலகள்,
விளையாட்டு,
இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்)

கௌரவ விருந்தினர்கள்
உயர்திரு. ஜெராட் நியூட்டன் திமதி
(கணக்காளர், இங்கிலாந்து)
திருமதி. லிடியா நியூட்டன் திமதி
(கணக்காளர், இங்கிலாந்து)

தலைவர்
அருட்திரு. க. ஜேம்ஸ் சிங்கராயர்
அதிபர்

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துவரல்
- தேசியக் கொடியேற்றுதல் - தேசிய கீதம்
- பாடசாலைக் கொடியேற்றுதல் - பாடசாலைக் கீதம்
- வரவேற்பு நடனம்
- மங்கல விளக்கேற்றுதல்
- இறைவணக்கம்
- வரவேற்புப்பாடல்
- வரவேற்புரை – திரு. லீ.இ. றோகன்
- அதிபர் அறிக்கை
- ஆங்கில நாடகம் - "School Project"
- ஆங்கில பேச்சு – செல்வி.ம.ஆன்டிலானி
- கௌரவ [illegible] விருந்தினர் உரை
- ஆங்கில குழுப்பாடல்
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில்கள் வழங்கல்
- இசை நாடகம் - "அரிச்சந்திர மயான காண்டம்"
- நன்றியுரை – திரு. ந. சத்தியரூபன்
- தமிழ்த் தாய் வாழ்த்து

## இறைவணக்கம்

இறைவணக்கம் இனிதாய்ப்பாடி
இறைவா உம்பெயர் புகழ்கின்றோம்
சங்கமமாகி சபைதனில்வாரும்
சரணம் சரணம் இறைவனே (2)

உலகாளும் இறைவா உறவாடவருவாய் - எம்
உணர்வோடு இன்றும் அவைதனில் அமர்வாய்
சக்தியும் நீயே } 2
சாந்தியும் நீயே
சரணம் சரணம் திருவடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

காக காக பகரிக ரிக ரிரிஸா
ரீரிரீரி கரிஸக ரிஸ கரிஸா
ஸஸாஸ ககாக மமாம பபாப
ஸாஸ ரீரி கரிஸா ஸரிகரிஸ

இருளினை அகற்றி ஒளியினை ஏற்ற - எம்
இதயத்திற் கென்றும் மெஞ்ஞானம் தருவாய்
வழியும் நீயே } 2
வாழ்வும் நீயே
சரணம் சரணம் உனதடி சரணம்
உலகம் அமைதிபெற உண்மை உயர்வு பெற
விரைவாய் வருவாய் பரமனே
எமது பணி சிறக்க கல்லூரி உயர்வடைய
வரம் பல அருள்வாய் வேந்தனே

## வரவேற்புப்பாடல்

இராகம் : ஹிந்தோளம்

அந்தோனி குடும்பத்தின் பரிசில் நாளாம்
சிறப்போடு நாமெல்லாம் மகிழும் திருநாளாம்

இவ் விழாவை சிறப்பிக்கும் பிரதம விருந்தினராம்
இளவாலையூர் பெற்ற இரவீந்திரன் ஐயாவே
வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரே
இன்பமுடன் வாழ்த்துகின்றோம் வருக வருகவே

சிறப்பு விருந்தினராய் எம் விழாவில் பங்கேற்கும்
பழைய மாணவரின் லண்டன் கிளைச் செயலாளரே
தம்பதியர் தங்களது வரவால் மகிழ்கின்றோம்
வருக வருகவென வாழ்த்தியே நிற்கின்றோம்

அந்தோனி குடும்பத்து அருட்பணி ஆயனே
ஜேம்ஸ் எனும் ராஜனே இனிய முதல்வனே
கல்வி கலையோடு ஆன்மீக அமுதத்தை
அள்ளி வழங்கிடும் வள்ளலே வருகவே!

சேவையில் உயர்ந்த ஏணியே, தோணியே!
கல்விப் பாதையினை காட்டிடும் ஆசான்களே!
பல நலம் பெற்று நீர் பாங்காய் வாழ்ந்திட
அந்தோனி பாதங்களில் படைக்கின்றோம் வருகவே!

கல்வி அதிகாரிகளே, அதிபரே, பெற்றோரே!
பழைய மாணவரே பண்புசால் பெரியோரே
நல்வரவு சொல்லி நமஸ்காரம் செய்தே
வருக வருகவென வாழ்த்துகின்றோமே.

# 2014ம் ஆண்டிற்கான அதிபரின் அறிக்கை

ஈழத்திருநாட்டின் சப்த தீவுகளின் தலையாகத் திகழும் ஊர்காவற்றுறையின் தனிப்பெரும் கலையகமாகத் திகழ்ந்து, திக்கெல்லாம் புகழ்பரப்பி அறிவியலிலும் விளையாட்டுக்களிலும் பல விழுமியச் சிறப்புக்களை கொண்டு விளங்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின், 2014ம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவினை சிறப்பிக்க, பிரதம விருந்தினராக வருகை தந்துள்ள, வடமாகாணக் கல்வித்துறையில் ஆளுமையின் ஆழ அகலத்தை நிலைநிறுத்தும் கௌரவ செயலாளர் மதிப்பார்ந்த திருவாளர் இராசா இரவீந்திரன் அவர்களே!

கௌரவ விருந்தினர்களாக இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் திரு. ஜெராட் நியூட்டன் திமதி மற்றும் அவர் தம் பாரியார் திருமதி லிடியா சுபோதினி திமதி அவர்களே, தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே, ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே,

உதவிக் கல்விப் பணிப்பாளர்களே, ஆசிரிய ஆலோசகர்களே,

அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே,

அயற்பாடசாலைகளின் ஆற்றல் மிகு அதிபர்களே, ஆசிரியர்களே,

பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே,

எமது பிரதேசத்திலுள்ள நிறுவனங்களின் தலைவர்களே,

பற்றுறுதி மிக்க பழைய மாணவர் சங்க தலைவரே, உறுப்பினர்களே

பெற்றோர்களே, நலன் விரும்பிகளே,

எனது அன்பான ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே,

மதிநலமிக்க மாணவமணிகளே,

உங்கள் அனைவரையும் இதயத்தால் அரவணைத்து, கழி பேருவகையுடன் அன்பான இனிய வணக்கங்கள் கூறி வரவேற்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். 143 ஆண்டுகளைக் கடந்து ஆய்ந்து

புனைந்த நல்லறிவை நாள்தோறும் ஊட்டும் கல்லூரித்தாய் இன்று பூரித்து நிற்கின்றாள். உங்கள் ஒவ்வொருவரது வருகையை நினைந்து மகிழ்ந்து நிற்கின்றாள். இவ்வரங்கில் மிகுந்த களிப்புடன் வருகை தந்திருக்கும் அனைவரையும் புளகாங்கிதம் அடைந்து உளமார வரவேற்கின்றேன். இன்றைய வரலாற்றுப் பொன் நாளிலே 2014ம் ஆண்டுக்கான அதிபர் அறிக்கையை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய தித்திக்கும் நாளில் பெருமை சேர்த்திடும் வண்ணம், எமது கல்லூரி மாணவச் செல்வங்களுக்கு பரிசில்களை வழங்கிப் பாராட்ட, இங்கு வருகை தந்திருக்கும் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கௌரவ செயலாளர் உயர்திரு. இராசா இரவீந்திரன் அவர்கள், பிரதம அதிதியாக வருகை தந்தமையால், எமது கல்லூரித் தாய் எழிற்சி பெறுகிறாள். தங்களது அளப்பரிய வேலைப்பளுவின் மத்தியிலும், எமது அழைப்பை ஏற்று வருகை தந்திருப்பதை நினைத்து தங்களுக்கு கல்லூரிக் குடும்பம் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தாய்நாட்டின் வடகரையை அண்மித்த மயிலங்கூடல், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தாங்கள் தந்தை இராசா அவர்களாலும், தாயார் பாக்கியம் அவர்களாலும் கண்ணெனப் பேணி வளர்க்கப்பட்டு சிறந்த பண்பாட்டு விழுமியங்களைப் பின்பற்றி வாழ்ந்து வருகிறீர்கள். தாங்கள் ஆரம்பக்கல்வியை யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்திலும், பின்னர் இடைநிலை, உயர்நிலைக் கல்வியை யா/காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில், விஞ்ஞானப் பிரிவிலும் கற்று யாழ்ப்பாண

பல்கலைகழகத்துக்கு தெரிவாகினீர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி சிறப்புப்பட்டத்தைப் பெற்று 1986ல் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றீர்கள். கல்வியிலும் சமூகப்பணியிலும் நீங்கள் கொண்ட ஆர்வம் காரணமாக 1991ல் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று, பூநகரி பிரதேச செயலாளராக 2000 ஆண்டு வரை கடமையைச் செவ்வனே ஆற்றியதுடன், பொதுநிர்வாகத்துறையில் முதுமானிபட்டத்தையும் பெற்றுள்ளீர்கள். பின்னர் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2001 வரை திருகோணமலை கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளராக கடமையைப் பொறுப்பேற்றீர்கள். தங்களிடம் காணப்படுகின்ற தகுதி, திறமை காரணமாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிமாகாணப் பணிப்பாளராக 2002-2007 வரை பணிபுரிந்தீர்கள். உங்கள் கடமை, கண்ணியம் கட்டுப்பாடுகள் காரணமாக விவசாய அமைச்சின் செயலாளராக 2007-2008 வரையும், பின்னர் 2008-2015 வரை சுகாதார அமைச்சின் செயலாளராகவும் கடமையைப் பொறுப்பேற்றீர்கள். உங்கள் சேவையின் மகத்துவம் காரணமாக இன்று கல்வி அமைச்சின் செயலாளராக கடமையைப் பொறுப்பேற்று பணியைச் செவ்வனே ஆற்றிவருகின்றீர்கள். தங்களுடைய சீரிய சிந்தனைகள், சொல், செயல்கள் மூலம் எதிர்காலத் தலைமுறைக்கு நல்வழி காட்டும் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இன்றைய பரிசளிப்பு விழாவில் மொட்டவிழ் அரும்பாக இருக்கும் எமது மாணவர்கள் தங்கள் கைகளால் பரிசில்களைப் பெறுவதில் அன்றலர்ந்த மலராகப் பிரகாசித்து மகிழ்வார்கள். உங்களைப் போல வாழ்வில் வெற்றியும் பெறுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். இச்சந்தர்ப்பத்தில் பொறியியல் பீட மாணவனாக படித்துக் கொண்டிருக்கும் தங்கள் மகன் சங்கீர்த்தன்

அறிவில் சூரியனைப் போல பிராகசிக்க வேண்டும் எனவும், உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ஏனைய இரு பிள்ளைகளும் கல்வியில் மென்மேலும் உயரவும் வாழ்த்துகிறேன். எமது அழைப்பை ஏற்று பல வேலைப்பளுக்கள் மத்தியில் இங்கு வருகை தந்தமைக்கு மீண்டும் நன்றி கூறுவதுடன், தங்களின் சேவைகளை இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பதுடன் இறையருள் தங்களுடன் என்றுமே இருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

எமது கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் ஆசிரியரான திரு. ஜெராட் நீக்கிலஸ் மற்றும் அவர் தம் துணைவியார் மகடலின் நீக்கிலஸ் ஆகியோரின் புதல்வராக நாரந்தனையில் பிறந்த இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர் மதிப்பார்ந்த உயர்திரு. ஜெராட் நியூட்டன் திமதி அவர்களே, தாங்கள் இக்கல்லூரியின் பற்றுறுதிமிக்க பழைய மாணவர் என்பதில் நாம் பெருமை அடைகின்றோம். தாங்கள் ஆரம்பக் கல்வியை நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயத்தில் கற்று இடைநிலைக்கல்வியை எமது கல்லூரியில் தொடர்ந்து கல்வியிலும் ஒழுகத்திலும் சிறந்த மாணவனாக திகழ்ந்தீர்கள். நாட்டின் சூழ்நிலை காரணமாக இங்கிலாந்து சென்று தொடர்ந்தும் வணிகத்துறையில் கல்வியை கற்று கணக்காளராக உயர்ந்து பணியாற்றி வருகின்றீர்கள். இங்கிலாந்தில் இயங்கும் பழைய மாணவர் சங்கத்தின் (SACKAAEU) செயலாளராக பதின்மூன்று ஆண்டுகள் பணியாற்றிவருவது தாங்கள் கல்லூரித் தாயின் மீது கொண்டுள்ள பற்றினை எடுத்துக் காட்டும் சிறந்த சான்றாகும். அத்துடன் ஒரு பிள்ளை நிதியத்தின் (One Child Foundation) உறுப்பினராக இருந்து பல பிள்ளைகளுக்கும் மாணவர்களுக்கும் தொண்டாற்றிவருவது பாராட்டப்பட வேண்டியதாகும். தங்களுடைய வருகை எம்மை மட்டற்ற

மகிழ்ச்சியடைய வைத்துள்ளது என்பதை அகமகிழ்ந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து மேடையை அலங்கரித்துக் கொண்டிருக்கும் திருமதி லிடியா நியூட்டன் திமதி அவர்களே, சுருவிலைச் சேர்ந்த ஆசிரியர் திரு. ஆபிரகாம் டோமினிக் மற்றும் திரேசா டோமினிக் அவர்களுக்கு மகளாகப் பிறந்து ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு நல்லாயன் கன்னியர் மடத்தில் கற்று இங்கிலாந்தில் வணிகக் கல்வியை நிறைவு செய்து முப்பது ஆண்டுகளாக கணக்காளராகப் பணியாற்றி வருகின்றீர்கள். இரண்டு பிள்ளைச் செல்வங்களுக்கு தாயாராக மட்டுமல்லாமல் தங்கள் அன்புக் கணவருடன் இணைந்தும், அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டும், சமூகப்பணிகளிலும் தங்களை ஈடுபடுத்தி அதில் மகிழ்ச்சி அடைந்துள்ளீர்கள். "ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கின்றாள்" என்ற கூற்றிக்கு ஏற்ப தங்களின் பணி தங்கள் கணவர் ஊடாக எமக்குக் கிடைத்துள்ளது என்று கூறுவதில் மகிழ்வடைகின்றேன். தங்களின் இல்லம் இங்கிலாந்து பழைய மாணவர் சங்கக் கூட்டங்களுக்கு பலமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதையும், அப்போதெல்லாம் தாங்கள் முன்னின்று அனைவரையும் உபசரித்து, சளைக்காமல் தேவையான உதவிகளையெல்லாம் செய்வதையும் இதற்குச் சான்றாகக் கூறமுடியும். இதனை நான் நேரில் கண்டு அனுபவித்தவன் என்பதில் மட்டற்ற மகிழ்சியடைகின்றேன். மேலும் ஒரு பிள்ளை நிதியத்தின் (One Child Foundation) பொருளாளராக இருந்து தங்கள் சேவையினை வழங்கிவருவதையிட்டும் நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். தங்கள் இருவரினதும் சேவைகள் பெருகவும் மென்மேலும் பல செல்வங்களையும் உயர்வுகளையும் பெறவேண்டி எல்லாம் வல்ல இறைவனை பிரார்திக்கின்றேன்.

## மாணவர் விபரம்

2014ல் கல்லூரியின் மாணவர் தொகை 351 ஆக இருந்ததுடன் க.பொ.த உயர்தரத்தில் 16 மாணவிகள் கல்லூரியில் வந்து இணைந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். நீண்ட போரின் பின்னர் எமது மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் மாணவர் தொகை தொடர்ந்தும் ஒரே மட்டத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்து ஆண்டு நாம் சந்தித்த நீண்ட கடுமையான வறட்சி எமது பிரதேசத்தை வெகுவாகப் பாதித்தமையினால், பலர் இடம்பெயர்ந்து யாழ்நகரப் பகுதிக்குச் சென்றதும், மீண்டும் திரும்பி வரத்தயங்குவதும் மாணவர் தொகையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். குடிநீர் சுகாதார போக்குவரத்து வசதிகள் முழுமையாக் கிடைபின் தீவகம் தான் முன்னர் வகித்த உயர்ந்த பொருளாதார நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.

## ஆசிரிய ஆளனி

2014ல் எமது கல்லூரியில் நிரந்தர ஆசிரியர்களும் 02 ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களும் 02 உதவி ஆசிரியர்களுமாக 27 பேர் சேவையாற்றி வந்தனர். இவர்களில் திருமதி.Y.சண்முகநாதன்,திருமதி.Y.றஞ்சித்குமார்,திரு.T. ஹென்றிறீகன், திரு.N.சத்தியரூபன், திரு.N.விஜயகுமார், திரு.G.மதனகோபன், திரு.P.ஆறுமுகம் ஆகியோர் வேறு பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்று முழுநேரமாக எம்முடன் 2014ல் இணைந்து கொண்டவர்களாவர்.

இதே வேளை எமது கல்லூரியின் நிரந்தர ஆசிரியர்களான செல்வி. வி. விமலாம்பிகை, செல்வி. அ. அரியநாயகம், திருமதி.S. பாலகாந்தன், திருமதி.J.V..றெஜினோல்ட், திரு. S. யசோதரன், திரு.P.ஆறுமுகம், திரு. K. சிவன்சேய் ஆகியோர் இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர். திரு. M.B. சுயாந்த் அவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும், திருமதி. சர்மிளா கேசவராஜா திருமணபந்தத்தில் இணைந்து கனடாவுக்கும் சென்றுள்ளார்கள். எமது கல்லூரியில் பிரதி அதிபாராகப் பணியாற்றிய திரு.P.W. நவராஜா அவர்கள் தொடர்ந்தும் GIZன் திட்டஉதவியாளராக பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார்.

பல மைல்களுக்கு அப்பால் வசிக்கும் ஆசிரியர்கள், தங்கள் சிரமத்தைப் பாராது நீண்டதூரம் பயணம் செய்து, கல்விப்பணியையும் இணைபாடவிதான செயற்பாடுகளையும் சிறப்பாகச் செய்வதை எண்ணி மனமாரப் பாராட்டுக்களயையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன். தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சேவையாற்றும் பிரதி அதிபர் திரு. லீ. இ. றோகான், உபஅதிபர் அருட்திரு. அ. கொன்பியூசியஸ், பகுதித் தலைவர்கள் செல்வி. ந. கந்தலீலா, திரு. செ. பரராஜசேகரம் ஆகியோருக்கும் எனது சிறப்பான நன்றிகள்.

## மாணவர் விடுதிச்சாலை

மேலும் எமது கல்லூரியுடன் இணைந்துள்ள மாணவர் விடுதிச்சாலை கல்லூரியின் வளர்ச்சியில் பிரதான பங்கினை வகிக்கின்றது. 2014ம் ஆண்டில் விடுதிச்சாலையின் பணியில் எம்முடன் இணைந்துள்ள அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்திரு. அ. கொன்பியூசியஸ் அடிகளார் மாணவர்களின் உடல்

உள வளர்ச்சியிலும், கல்வியிலும் அக்கறை செலுத்தி அர்ப்பணிப்புடன் பணியாற்றிவருகின்றார். போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் உளஆற்றுகைப்படுத்தலில் இவரின் பங்கு முக்கியமானதாக உள்ளது. இவருக்கு துணையாக அருட்சகோதரர். ஞா. ஞானரூபன் அவர்கள் பத்துமாதங்கள் இணைந்து விடுதிச் சாலையிலும் பாடசாலையிலும் பணியாற்றியமைக்காக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். மேலும் எமது கல்லூரியின் பழைய மாணவர் திரு. மரிஸ்ரன்பாலா டினேஸ் அவர்கள் விடுதிச்சாலையில் தங்கியிருந்து மாணவர்களை வழிநடத்துவதில் உதவிபுரிவதுடன் விளையாட்டுத்துறையில் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி உதவிபுரிவதையிட்டு மனமகிழ்கின்றோம்.இவர்கள் அனைவரும் ஆற்றிவரும் சேவைகளுக்கு கல்லூரிக் குடும்பம் சார்பில் உளமார்ந்த நன்றிகளைக் கூறுகிறேன்.

"கிறிஸ்து இல்லம்" என்ற பெயருடன் இயங்கிவரும் இவ்வில்லம் யாழ்மறைமாவட்ட ஆயரின் கண்காணிப்பில் இருப்பதுடன் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் இல்லமாக தற்போது இயங்கிவருக்கின்றது. ஆயினும் இது நடைமுறையில் சிறுவர் இல்லமாக அல்லாமல் மாணவர் விடுதிச்சாலையாகவே செயற்பட்டுவருகின்றது. ஆகவே நாம் இதனை 1990ம் ஆண்டிக்கு முன்னர் இயங்கிய மாணவர் விடுதியாக மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்பதையும் இவ்வேலையில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் முழுநேரமாக விடுதிச்சாலை மாணவர்களைப் பராமரிக்கக் கூடிய அருட்சகோதரர்கள் எம்மத்தியில் பணியாற்றினால் 50 மாணவர்களுடன் இயங்கும் இவ்வில்லதில் மேலும் பல மாணவர்கள் இணைந்து பயனடைய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளகிறேன்.

## கல்விசாரா ஊழியர்கள்

2014ம் ஆண்டு எமது கல்லூரியில் பாடசாலை காவலாளி ஒருவரும், ஆய்வுகூட உதவியாளர் ஒருவரும், பாடசாலை பணியாளர் இருவரும், சுத்திகரிப்பு பணியாளர் ஒருவரும் சேவையாற்றி வருகின்றனர்.

பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் நீண்ட தூரம் பிரயாணம் மேற்கொண்டு இங்கு வந்து கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். தமது குடும்பச் சுமைகளுடன் பல சவால்களை எதிர் கொண்டு, கல்வியூட்டுதலை தமது மேலான சேவையாகக் கருதி, குறைந்த வேதனத்திலும் இங்கு பணியாற்றி வரும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பை, நாம் எப்போதும் நன்றியுடன் நோக்குகின்றோம். பல இடர்களின் மத்தியில் அரும்பணி ஆற்றி வரும் இவ் ஆசிரியர்களையும், கல்வி சாரா ஊழியர்களையும் இவ்விடத்தில் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

## கல்வி அபிவிருத்தி

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தர பெறுபேறுகள் தொடர்ந்தும் சிறப்பாக உள்ளன. 2014 மார்கழியில் இடம் பெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியோரில் 41.1 வீதமானோர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். உயர்தர பரீட்சையில் 2014 ஆவணியில் தோற்றியோரில் 74.19 வீதமானோர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றதோடு 3A தொடர்ந்தும் கலைப்பிரிவில் சிறந்த பெறுபேறாகவும் உள்ளது.1990 ஆண்டின் பின்னர் எமது கல்லூரியில் 2012ம் ஆண்டில் கணித, விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த வருடம் கணிதப்பிரிவில் எமது கல்லூரி மாணவன் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டமை மகிழ்வான விடயமாகும்.

## நூல்நிலையம்

மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் ஆளுமை விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தி வருவது நூல் நிலையம் என்றால் அது மிகையில்லை. 2014ஆம் ஆண்டு மாணவர்களின் நேரசூசியில் நூலகத்துக்கு ஒதுக்கப்பட்ட பாட வேளைகளில் நூலகத்துக்குச் சென்று தமது அறிவுவிருத்தியை வளப்படுத்துகின்றனர். மேலும் புத்தகப்பெட்டி, இடைவேளையின் போது பத்திரிகை வாசிப்புச் செயற்பாடுகள் மாணவர்களின் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்துவதாக உள்ளது. அத்துடன் வாசிப்பு மாதத்தினையொட்டி ஒக்டோபர் மாதம் கட்டுரைப் போட்டிகள், கவிதை போட்டிகள், வாசிப்புப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்கின்றனர். மேலும் ஆசிரியர்களதும் மாணவர்களினதும் வாசிப்பு, நூலகம் தொடர்பான நற்சிந்தனைகள் வழங்கப்படுகின்றன. 2014ஆம் ஆண்டு 376 நூல்கள் 7 சஞ்சிகைகளும் புதிதாக கிடைக்கப்பெற்றுள்ளன. கனடா மொன்றியலில் பேராசிரியராகப் பணியாற்றும் எமது கல்லூரியின் பழைய மாணவர் கலாநிதி செல்லையா இராஜலிங்கம் அவர்கள் நூலக வளர்ச்சிக்காக 500 கனடா டொலர்களை வழங்கியுள்ளார். எனவே நூலகம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்பது ஐயமில்லை. நூலகத்துக்குப் பொறுப்பாசிரியராக இருந்து அதனை உயர்தரத்தில் பேணி ஒழுங்கமைப்புச் செய்து வரும் நூலக ஆசிரியை திருமதி. உதயேஸ்வரி நிமலன் அவர்களுக்கும் உதவிகள் புரிந்துவரும் செல்வி.ம.மகின்சியா அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.

## கணினி நிலையம்

இன்றைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி காரணமாக எமது கல்லூரி மாணவர்களையும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினுள் உள்ளீர்க்கும் தேவை உள்ளது. தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் தமது பாடவேளைகளிலும் ஓய்வு வேளைகளிலும் ஆய்வு கூடங்களைப் பயன்படுத்தி தமது கணினி அறிவை மேம்படுத்துகின்றனர். கடந்த வருடம் எமது பாடசாலையில் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்பட்டு மாணவர் பாவனைக்கு கையளிக்கப்பட்டமை சிறப்பான விடயமாகும்.

அத்துடன் எமது கல்லூரி மாணவன் செல்வன். J. ஜோன்ஜெரி CSSL & E-Soft IT Mastermind Competition 2014 இற்கான பாடசாலை மாணவர்களுக்கான தேசிய அளவிலான போட்டியில் வெற்றி பெற்று ITN TV Round ல் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் கணினி மென்பொருள் ஆக்கப்போட்டியில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குபற்றி பரிசில்கள், சான்றிதழ்கள் பெறுகின்றமை மகிழ்வான செயற்பாடுகளாகும். எமது கல்லூரி வலையமைப்பில் இணைக்கப்பட்டு தனக்கென்று பிரத்தியேகமான வலையமைப்பபை Website – www.kaytsantonys.sch.lk கொண்டுள்ளமை எமது கணினி நிலைய விருத்திக்கான சான்றாகும். இதற்குப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்படும் ஆசிரியை செல்வி.R.பொன்னம்பலம் அவர்களுக்கும், ஆசிரியர் L.I.றோகன் அவர்களுக்கும் எனது நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

## ஆங்கில இலக்கிய மன்றம்

ஆங்கில மொழியானது இன்றைய நவீன உலகின் இன்றியமையாத தொடர்பாடல் மொழியாக விளங்குகின்றது. சர்வதேச சமூகத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டுமாயின் மாணவரிடையே ஆங்கில மொழி மீதான ஆர்வம் அதிகரிக்கப்பட வேண்டும். ஆங்கில மொழிப் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் மாதாந்தம் குறிப்பிட்ட புதன் கிழமைகளில் ஆங்கில இலக்கிய மன்றம் நடத்தப்பட்டு வருகின்றது. இதனூடு மாணவர்களின் எழுத்து, பேச்சு, வாசிப்பு மற்றும் கிரகித்தற் திறன்கள் மேம்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு பாடசாலை மட்டத்தில் Recitation, Copywriting, Reading, Dictation, Creative Writing, Oratory, News Reading , Solo Acting ஆகிய போட்டிகள் வகுப்பு ரீதியாக நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்கள் கோட்ட, வலய, மாகாணப்போட்டிகளில் பங்குபற்றி சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளனர்.

"Julius Caeser" எனும் நாடகம் திறந்த ஆங்கில இலக்கிய போட்டியில் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று மாகாண மட்டப்போட்டிக்கு தெரிவாகியமையும், பிரிவு V க்குரிய Oratory (Prepared) போட்டியில் செல்வி.ம.ஆன்டிலானி வலய மட்டத்தில் 1ம் இடத்தை பெற்று மாகாணப்போட்டியில் பங்குபற்றியமை சிறப்பான விடயங்களாகும். கனிஷ்ட பிரிவு குழுப்பாடல் போட்டியில் 3ம் இடத்தையும் சிரேஷ்ட பிரிவு குழுப்பாடல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை மகிழ்வான விடயங்களாகும். மேலும் கடந்த ஆண்டு ஆங்கில தினம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பிரதம விருந்தினராக புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமட அதிபர் முன்னாள் ஆசிரியருமான அருட்தந்தை. M.A.P.R.Savundaranayagam அவர்கள் கலந்து

சிறப்பித்தமை பெருமைக்குரிய விடயமாகும். இதற்குப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்ட ஆசிரியை திருமதி. S. முருகானந்தன் அவர்களுக்கும், அருட்திரு. அ. கொன்பியூசியஸ் அவர்களுக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழ் மன்றம்

தமிழ் இலக்கிய மன்றமானது மாணவர்களிடையே தமிழ் விருத்தியினை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. தமிழ்மொழித்தினப் போட்டிகளில் கோட்ட, வலய, மாகாணப் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி சிறப்பான இடங்களைத் தக்கவைத்துள்ளனர். மாதம் தோறும் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் நடைபெறும் மன்ற நிகழ்வுகள் மூலமாக மாணவர்களின் தமிழ்மொழி அறிவு, ஆற்றல், திறன்கள் விருத்தியுடன் தலைமை ஏற்கும் பண்பு, கலைத்திறன்கள் என்பன வளர்க்கப்படுகின்றன. சென்ற வருடம் தமிழ்மன்றத்தினரால் முத்தமிழ் விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக எழுத்தாளர் திரு.செ.யோசப்பாலா அவர்கள் கலந்து சிறப்பித்தார். தமிழ்மன்றத்தினரால் "அலைமாடம் - 02" சஞ்சிகை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இச் சஞ்சிகையில் ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்கள் இடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியவை. இச் சஞ்சிகை மூலம் மாணவர்களது ஆளுமை மென்மேலும் வளர்க்கப்படும் என்பது திண்ணம்.

கடந்த ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்கள் கோட்ட, வலய, மாகாணப் போட்டியில் பங்குபற்றி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். அந்த வகையில் பேச்சுப்போட்டியில் செல்வன்.கெ.கனிஸ்ரன் பிரிவு II இல் கோட்ட மட்டத்தில் 2ம் இடத்தையும், செல்வன்.இ.டிசோன் பிரிவு III இல் 2ம் இடத்தையும், செல்வன்.ஶ்ரீ.டினோசன் பிரிவு IV இல் 1ம் இடத்தினையும், வலய மட்டத்தில் 3ம் இடத்தினையும், பிரிவு V இல் செல்வன்.அ.சாள்ஸ் டிலக்சன் 1ம் இடத்தையும், வலய மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். செல்வி.உ.சிந்துஜா பிரிவு V பாவோதல் போட்டியில் கோட்ட, வலய மட்டத்தில் பங்குபற்றி 1ம் இடத்தை பெற்று மாகாணப் போட்டியில் பங்குபற்றினார். குழு இசை பிரிவு I கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. திறந்த போட்டியான நாட்டார் பாடல் போட்டியில் கோட்ட, வலய மட்டங்களில் 1ம் இடத்தைப் பெற்று மாகாணப்போட்டியில் பங்குபற்றினர். மேலும் விவாதப்போட்டியில் கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் வலயமட்டத்தில் 3ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர். திறனாய்வுப் போட்டியில் செல்வி.ம.மயூரி கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும் வலய மட்டத்தில் 2ம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார். பிரிவு I கவிதைப்போட்டியில் செல்வி.ச.ஜெகப்பிரியா கோட்டமட்டத்தில் 1ம் இடத்தினையும் வலயமட்டத்தில் 2ம் இடத்தினையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவற்றிக்குப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்படும் திரு. N. சசிகுமார் அவர்களையும், உதவிகள் புரிந்த ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டிநிற்கின்றேன்.

## கிறிஸ்தவ மன்றம்

கிறிஸ்தவ மன்றமானது கத்தோலிக்கத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. காலைப் பிரார்த்தனை, மாதத்தின் முதல் வெள்ளி திருப்பலி, ஆலய விழாக்கள் போன்றவற்றில் மாணவர்களைச் சிறப்பான முறையில் ஈடுபடச் செய்கின்றது. மேலும் தவக்காலத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் திருச்சிலுவைப்பாதை தியானத்தினை ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் சிறப்பிப்பது மகிழ்வான விடயமாகும். கிறிஸ்தவ அறிவையும், விழுமியங்களையும் மாணவர்களுக்கு புகட்டி அவற்றை விருத்தியடையச் செய்யும் நோக்கில் மாதம்தோறும் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் மன்றச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. கடந்த ஆண்டு யேசுவின் பிறப்பினை நினைவு கூரும் "ஒளி விழா" சிறந்த முறையில் நடைபெற்றுள்ளது. மேலும் கிறிஸ்தவ மாணவர்களின் மறை அறிவை வளர்க்கும் நோக்கில் திருவிவிலிய வினாவிடைப் போட்டிகளில் மறை மாவட்டம் வரை போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர். இச் செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் வேதாகம அறிவை பெற்றுக்கொள்வர் என்பது திண்ணம். இவற்றுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியர்கள் அருட்திரு. அ. கொன்பியூசியஸ், செல்வி தர்சிகா ஆகியோரைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

## இந்து மன்றம்

இம் மன்றமானது மாணவர்களிடம் ஆன்மீக உணர்வை ஏற்படுத்தி சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் முனைப்போடு தன் பணிகளை செவ்வனேயாற்றி வருகின்றது. இம் மன்றச் செயற்பாடுகளாக காலையில் தேவார புராணம், காயத்திரி மந்திரம்,

வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம், கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் நவராத்திரி விழா பூசை என்பனவும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றன. சமய அறிவை விருத்தி செய்யும் நோக்கில் மாதாந்தம் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் மன்றச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. நவராத்திரி விழா கடந்த வருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ் விழாவின் போது கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் மாணவர்களின் நாவண்மையை வளர்க்கும் நோக்குடன் மனனம், பண்ணிசைப்போட்டிகள் என்பனவும் மாலை கட்டுதல், கோலம் போடல் போட்டிகளும் நடை பெற்றமை சிறப்பான விடயங்களாகும். மேலும் இந்து சமய மாணவர்கள் சைவ பரிபாலன சபை பரீட்சையில் பங்கு பற்றி சமய அறிவை வளர்த்துக் கொள்ள இம்மன்றமானது உறுதுணையாக உள்ளது. கடந்த ஆண்டு ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் சிறப்பாக நடை பெற்றது. மாணவர்களுக்கு “ஆடிக்கூழ்” வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு சப்பிரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் கலந்து சிறப்பித்தமை மகிழ்வான விடயமாகும். இம் மன்ற வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் பொறுப்பாசிரியர் திரு K..சிவஸ்ரீசாந்திநாயகன் அவர்களையும் மன்ற நிர்வாகக் குழு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

## சமூக விஞ்ஞான மன்றம்

இம் மன்றமானது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும் மன்றமாக திகழ்ந்து வருகின்றது. மாணவர்களிடையே பொது அறிவையும் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் மன்றமாக செயற்பாட்டு வருகின்றது. மாதம் தோறும் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் இம் மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மன்ற

நிகழ்வுகளில் பரந்து விரிந்து உலகிலே நிகழும் பௌதீக, பண்பாட்டு மாற்றங்கள் தொடர்பாகவும், பொது அறிவு தொடர்பான நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்கப்படுகின்றன. கடந்த வருடம் பாடசாலை மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கோட்ட, வலயப் போட்டிகளில் பங்கு பற்றிச் சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளனர். வலய மட்டப் போட்டியில் செல்வன். சி. கபிலன், செல்வன். யோ. கம்ரியூஸ் ஆகியோர் முறையே 1ம், 2ம் இடங்களைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். வெற்றி பெற்ற மாணவர்களையும் பொறுப்பாசிரியை திருமதி.ச.இராகவன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

## கணித விஞ்ஞான மன்றம்

மாணவர்களிடையே கணித – விஞ்ஞான அறிவையும் ஆளுமையையும் வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இம் மன்றம் கடந்த ஆண்டில் தனது செயற்பாடுகளை மென்மேலும் முன்னெடுத்துள்ளது. இம் மன்றச் செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் பாடங்களில் உரிய தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கும் கற்பித்தல் செயற்பாட்டுடன் கூடிய மேலதிக மாலை நேர வகுப்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டு செயற்பட்டு வருகின்றன. கணித விஞ்ஞானப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெறுவதற்கு ஊக்கமளிக்கப்படுகிறது. விஞ்ஞான தமிழ் மொழி மூல வினாடிவினாப் போட்டியில் தரம் 7யைச் சேர்ந்த செல்வன். புரோகிதர் சகாய பென்கனன் வலய மட்டத்தில் 1ம் இடத்தையும், தரம் 8 யைச் சேர்ந்த செல்வன். நி.நிதுர்சன் 3ம் இடத்தையும், தரம் 11யைச் சேர்ந்த செல்வன். அ. சாள்ஸ் டிறோசன் 2ம் இடத்தையும், தரம் 9 யைச் சேர்ந்த செல்வன். ஜீ.மிலோஜன், செல்வன். அ. அன்ரன்லியோ ஆகியோர் 1ம் இடங்களைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை

சேர்த்துள்ளனர். வலய மட்ட ஆங்கில மொழி மூல வினாடி வினாப் போட்டியில் தரம் 8யைச் சேர்ந்த செல்வன். ஞா. டக்சன் 1ம் இடத்தையும், செல்வன். எ. ரவிராஜ் 2ம் இடத்தையும், செல்வன். த. தர்சிகன் 3ம் இடத்தையும், பெற்றதோடு செல்வன்.ஞா.டக்சன் மாகாண மட்ட ஆங்கில மொழி மூல வினாடிவினாப் போட்டியில் 4ம் இடத்தையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். இவற்றிக்கு பொறுப்பாசிரியர்களாக இருந்து செயற்பட்ட திரு.N. விஜயகுமார், திருமதி. சா.இராதாகிருஸ்ணன், திருமதி. V. தனறஞ்சன் மற்றும் உதவிகள் புரிந்த ஏனைய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

## கவின் கலை மன்றம்

மாணவர்களிடையே கவின் கலை ஆற்றல்களை வளர்ப்பதற்கு இக் கவின் கலை மன்றம் அரும் பணியாற்றி வருகின்றது. இம் மன்றத்தின் மூலம் நடிப்பு, ஓவியம், இசை, நடனம் போன்ற திறன்கள் இனங் காணப்பட்டு வளர்க்கப்படுகின்றன. கலை, கலாசார விழுமிய பண்புகள் இம் மன்றத்தின் மூலம் கட்டியெழுப்பப்படுகின்றன. கடந்த வருடம் தீவக வலயத்தினால் காரைநகரில் ஒழுங்கு செய்யப்பட்ட பௌர்ணமி விழாவில் எமது மாணவர்கள் "வீர பாண்டிய கட்டப் பொம்மன்" என்ற நாடகத்தைச் சிறப்பு நிகழ்ச்சியாக வழங்கி வலயக் கல்விப்பணிப்பாளரின் பாராட்டுக்களைப் பெற்று கல்லூரிக்கு புகழைச் சேர்த்துள்ளனர். இவற்றிற்கு பொறுப்பாக இருந்து வழி நடத்துகின்ற ஆசிரியர் திரு. கோ. மதனகோபன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சுகாதார மன்றம்

எமது கல்லூரியின் சுகாதார மன்றத்தின் ஊடாக பாடசாலையின் சுற்றுப்புறச்சூழல் சுத்தத்தினைப் பேணுதல், மாதம் ஒரு முறை சிரமதானம் பணியினை மேற்கொள்ளுதல், மலசல கூட சுத்தத்தினைப் பேணுதல், தினம் தோறும் காலை உடற்பயிற்சியில் மாணவர்களை ஈடுபடுத்தி வழிப்படுத்தல், மாணவர் மத்தியில் சுகாதாரப் பழக்க வழக்கம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன் மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் உள்ளது. இம் மன்றத்தின் ஊடாக சுகாதாரப் பரிசோதகர் மற்றும் வைத்திய அதிகாரி ஆகியோர் கிரமமாக வருகை தந்து மாணவர்களின் உடல் ஆரோக்கிய நலன்களைப் பரிசோதித்து மாணவர்களின் நலனில் அக்கறையுடன் செயற்படுகின்றனர். இதற்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியை திருமதி. உதயசுதர்சினி குணநேசன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

## வணிக மன்றம்

இம் மன்றமானது மன்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டு மாணவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் அயராது பாடுபடுகின்றது. நடைமுறை வணிக உலகின் வளர்ச்சிக்கு ஏற்ப வளமுள்ள வணிகர்களையும் முகாமையாளர்களையும் உருவாக்க வேண்டிய தேவைப்பாட்டைக் கொண்டுள்ளது வணிகத்துறை மாணவர்கள் பாடசாலை மட்ட, கோட்ட மட்ட, வலய மட்ட வணிகப் போட்டிகளில் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை சிறப்பான விடயமாகும். இதற்குப் பொறுப்பாக இருந்து

செயற்பட்ட ஆசிரியை திரு. S. யசோதரன் அவர்களுக்கும் திருமதி. A.M. இளங்கோ அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

## அனர்த்த முகாமைத்துவக்குழு

உலகில் ஏற்பட்டு வரும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாடசாலையில் இக்குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ வினா விடை போட்டிகளில் பாடசாலை, கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி நிற்பது சாலச் சிறந்தது. இவற்றிப்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்ட ஆசிரியை திருமதி. S. இராகவன், மற்றும் திரு. T. ஹென்றிறீகன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

## கட்புல செவிப்புல அறை

நவீன தொழில்நுட்ப அறிவுடன் கூடிய திறன்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கு உண்டு. அந்த வகையில் கட்புல செவிப்புல அறையானது கல்லூரி மாணவர்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிகின்றது. OHP மூலமும் பல்லூடகத்தின் மூலமும் கற்றல் செயற்பாடுகள் ஆசிரியர்களினால் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இணைப்பாடவிதான செயற்பாடுகள், பாடசாலை நலன் சார்ந்த நிகழ்வுகள், கூட்டங்கள் நடத்துவதற்கு பயனுள்ளதாக அமைந்தள்ளது. கடந்த ஆண்டு 2ம், 3ம் தவணைகளில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்காக 220க்கு மேற்பட்ட பாடவேளைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாணவர் உயர்மட்டச் செயற்பாடுகள், ஆசிரியர்களுக்கான உள்ளக செயலமர்வுகள், சாரணர் கூட்டங்கள், பிரதேச மட்ட கலந்துரையாடல் போன்றவற்றுக்காக பாடசாலை முடிவடைந்த பின்னரும், வார இறுதி நாட்களிலும் கட்புல செவிப்புல அறை பயன்பாட்டில் உள்ளது. கட்புல செவிப்புல அறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுவதாக இருப்பதை நினைந்து அகமகிழ்வடைவதுடன் இதற்கு பொறுப்பாக செயற்படுகின்ற ஆசிரியர் திரு. த. ஹென்றிநீகன் அவர்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.

## விளையாட்டு

எமது கல்லூரி மாணவர்களின் உடல் உள திறன்களை விருத்தி செய்வதில் விளையாட்டுத்துறை பெரும்பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அவ்வகையில் விளையாட்டுத்துறை சார்ந்த ஆசிரியர்கள் பெரும்பங்காற்றி வருவதுடன் கல்லூரியின் புகழை ஓங்கச் செய்வதற்கும் இத்துறையூடாகவும் செயலாற்றுகின்றனர். கடந்த ஆண்டில் எமது கல்லூரி அணிகள் மற்றும் வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியதுடன் சாதனைகளையும் புரிந்துள்ளனர்.

## இல்ல விளையாட்டுப் போட்டிகள்

எமது கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 08.02.2014 அன்று சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக மக்கள் வங்கி ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் திருவாளர்.M.கலிஸ்ரன் கலந்து சிறப்பித்தமை மகிழ்வான

விடயமாகும். இவ்வாண்டும் சேவியர் இல்லம் முதன்மையிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## மெய்வல்லுநர் போட்டிகள்

கடந்த ஆண்டு நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் கோட்ட மட்டத்தில் 50 - 1ம் இடங்களையும் 29- 2ம் இடங்களையும் 26- 3ம் இடங்களையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். வலய மட்டப் போட்டியில் 31 -1ம் இடங்களையும் 19- 2ம் இடங்களையும் 16 - 3ம் இடங்களையும் பெற்றுள்ளனர். மாகாண மட்டப் போட்டியில் செல்வன் S. ஜெனராஜ் உயரம் பாய்தல் நிகழ்வில் 17 வயதுப் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் கலந்து கொண்டு 7ம் இடத்தினை பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு சதுரங்க விளையாட்டில் வலய மட்டத்தில் 3ம் இடத்தையும், 19 வயதுப் பிரிவு 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். மேலும் வலய மட்ட 15 வயதுப் பிரிவு கரம் போட்டியில் 3ம் இடத்தையும், 19 வயதுப் பிரிவு 1ம் இடத்தையும் பெற்றுள்ளனர். வலய மட்ட பூப்பந்துப் போட்டியில் வலய மட்ட 15 வயதுப் பிரிவு 1ம் இடத்தையும், 19 வயதுப் பிரிவு 1ம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். வலய மட்டபோட்டியில் 19 வயதுப் பிரிவு மென்பந்து அணியினர் 1ம் இடத்தையும் பெற்றுள்ளார். வலய மட்டபோட்டியில் 19 வயதுப் பிரிவு எல்லே அணியினர் 3ம் இடத்தை பெற்றுக் கொண்டனர். வலய மட்ட கபடிப் போட்டியில் 15 வயதுப் பிரிவு கபடி

அணியினர் 2ம் இடத்தையும் 19 வயதுப் பிரிவினர் 1ம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்பது சிறப்பான விடயமாகும்.

கடந்த ஆண்டு 15 வயதுப் பிரிவினருக்கான 7பேர் கொண்ட "றக்பி" போட்டி யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. எமது கல்லூரியில் இருந்து A,B என இரு அணியினர் பங்கு பற்றினர். இதில் A அணியினர் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அவ் அணியினருக்கு எமது பாராட்டுக்களை தெரிவித்தக் கொள்கின்றேன்.

## உதைபந்தாட்டம்

மேலும் யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி தனது 120வது ஆண்டு நிறைவை முன்னிட்டு 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட போட்டியை நடத்தியது. எமது கல்லூரி அணியினர் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எமது கல்லூரி உதைப்பந்தாட்ட அணியினர் வலய மட்டப் போட்டியில் 14 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தையும், 16 வயதுப் பிரிவினர் 1ம் இடத்தையும், 18 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தையும் பெற்று மாவட்ட போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் கடந்த வருடம் எமது கல்லூரி உதைப்பந்தாட்ட அணியினர் புனித ஹென்றியரசர் கல்லூரி, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, புனித சம்பத்திரிசியார் கல்லூரி, பரியோவான் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான சிநேக பூர்வ உதைப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## கராத்தே அணி

எமது கல்லூரியில் 2012ம் ஆண்டிலிருந்து கராத்தே அணி சிறப்பாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வணி மூலம் மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் முகமாக கராத்தே பயிற்சிகள் இடம் பெறுகின்றன. 17 வயதுப் பிரிவு மாகாண மட்டப் போட்டியில் செல்வன்.M.முரளி 1ம் இடத்தையும் யூடோவில் 3ம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். 19 வயதுப் பிரிவு மாகாணப் போட்டியில் செல்வன்.M.சுகிர்தன் கராத்தேயில் 1ம் இடத்தையும் பெற்று பாடசாலை சமூகத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

## உடற்பயிற்சி அணி

உடற்பயிற்சி விளையாட்டுத்துறையில் எமது மாணவர்கள் தொடர்ந்தும் தேசியமட்டத்தில் முன்னிலையில் இருந்து செயல்பட்டு வருகின்றனர் என்பதை நான் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 2014ல் 30 மாணவர்களைக் கொண்ட உடற்பயிற்சி அணி வடக்கு மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டப் போட்டியில் 3ம் இடத்தையும் பெற்று கல்லூரியின் புகழை வானுயர ஓங்கச் செய்துள்ளனர். உடற்பயிற்சி அணியினைப் பயிற்றுவித்த திரு. ம.பா.சுயாந், மற்றும் திரு.U. றொகான் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றேன்.

எமது கல்லூரி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நீச்சல், மரதன் ஓட்டப் போட்டிகளும், உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே மென்பந்து கிரிக்கெட் போட்டிகளும் நடைபெற்றமை மகிழ்வான விடயமாகும்.

இவ்விளையாட்டு நிகழ்வுகள் யாவற்றுக்கும் பொறுப்பாக இருந்து செயற்பட்ட திருமதி. உதயசுதர்சினி குணநேசன், அருட்திரு. அ. கொன்பியூசியஸ், திரு.ம.பா.சுயாந் மற்றும் உதவியாக செயற்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பரியோவான் முதலுதவிப் படை

பரியோவான் படையில் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவ் அமைப்பானது கல்லூரியில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் அம்புலன்ஸ் அமைப்பின் கொடியேற்றி மரியாதை செலுத்தப்படுகின்றது. இம் மன்றமானது பாடசாலை விளையாட்டுப் போட்டி, கோட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் தொண்டர் சேவையினை வழங்கி வருகின்றமை சிறப்பான அம்சமாகும் மேலும் நயினாதீவு நாகபூசணி அம்மன் திருவிழா, சாட்டி மாதா ஆலயம், சின்னமடு மாதா ஆலயம் வருடாந்த உற்சவங்களின் போது போக்குவரத்து கடமைகளிலும், முதலுதவி சிகிச்சை வழங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது. இவர்களுக்கு பொறுப்பாக இருந்து வழிகாட்டும் ஆசிரியை செல்வி. ந. கந்தலீலா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு இவர்களின் சேவைகள் சிறக்க வாழ்த்துகின்றேன்.

## சாரணர் இயக்கம்

சாரணர் இயக்கத்தில் தரம் - 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் அங்கம் வகித்து தமது சேவையினை திறம்பட ஆற்றி வருகின்றனர். சாரணர் இயக்கமானது ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் சாரணக்கொடியேற்றப்பட்டு மரியாதை

